# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 142/2021 நாள்.25.8.2025

DW1- திரு.நிரஞ்சன் , த /பெ. திரு. அனந்தராஜன்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் 1ஆம் பிரதிவாதி என் சகோதரி என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி கிருஷ்ணராஜ் எனது சகோதரி சித்ராவின் கணவர் என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி சுவேதா எனது சகோதரி சித்ராவின் மகள் என்றால் ஆமாம். வழக்கை தாக்கல் செய்த பிரியகாருணி எனது தாயார் என்றால் ஆமாம். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் MCA. எந்த வருடம் படிப்பை முடித்தேன் என்றால் 2004. எப்போது வேலைக்கு போனேன் என்றால் 2007. என்ன வேலை என்றால் HDFC வங்கியில் தொடர்பு துறை மேலாளராக இருக்கிறேன். அப்போது என் சம்பாத்தியம் ரூ. 6500. அப்பா அனந்தராஜன் என்ன வேலை பார்த்தார் என்றால் துணை வட்டாட்சியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஓய்வு பெற்றதில் ஒய்வூதியம் கிடைக்கிறது என்றால் ஆமாம். ஓய்வு பெற்ற பிறகு பணிக்கொடை கிடைத்தது என்றால் ஆமாம். என் திருமணத்திற்கு முன்பே எங்கள் சகோதரிகள் கிரிஜாவுக்கும் சித்ராவுக்கும் திருமணம் முடிந்துவிட்டது என்றால் ஆமாம். தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் என் பாட்டி ஜெயலெட்சுமியின் அப்பா சொத்து ஆண்வாரிசுக்கு என்று உயிலில் எழுதியுள்ளதாக சொல்கிறேன் என்றால் ஆமாம். 15.2.1979 என் தாத்தா தீபநாயகம் என்பவர் எனது அப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும் உயில் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த உயில்படி பத்மராஜனும், அனந்தராஜனும் அடைந்து அனுபவித்தார்கள் என்றால் ஆமாம். என் அப்பா இறக்கும் வரை நாணயக்கார செட்டிதெருவில் தாவா 1வது அயிட்ட சொத்தில் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். அப்பா இறந்தபிறகு என் மனைவிக்கும் என் அம்மாவுக்கும் சிறுசிறு கருத்துவேறுபாடு வரும் என்றால் ஆமாம். அதனால் அம்மா என் சகோதரி கிரிஜா வீட்டிற்கு சென்றுவிடுவார் என்றால் என் அப்பாவின் பென்சன் வருவதில் பெயர் எழுத்து குறைபாட்டால் ஒரு வருடம் தாமதமானது அந்த பணம் வந்த பிறகு என் அம்மா என் அக்கா வீட்டிற்கு அவர் துண்டுதலால் போய்விட்டார். என் தாயார் இருந்த அறையை பூட்டி வைத்துவிட்டு நான் அவரை அறைக்குள் செல்ல

அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. சண்டைபோட்டு கொண்டு அக்காவீட்டிற்கு போய்விட்டார். அப்பா இறந்தபிறகு அப்பாவின் சொத்து எனக்கு, என் அம்மாவுக்கு, அக்காவுக்கு பாகம் என்றால் நிலத்தை பொறுத்தவரை ஆண்வாரிசுகளுக்குதான் சொந்தம். வீட்டை பொறுத்தவரை வாங்கபட்ட கடன் மற்றும் அப்பா இறந்தபோது இருந்த கடன் ஆகியவைகளை நான்தான் 3 பைசா வட்டிக்கு கடன் வாங்கி அடைத்தேன். கடன் வாங்கி அடைத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த வருடம் கடன் வாங்கினேன், என் நிரூபண வாக்குமூலத்தில் எவ்வளவு கடன் என்றும் யாரிடமிருந்து எவ்வளவு வாங்கினேன் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லலாம். என் அக்காவுக்கு 17.5 சதவீத வட்டிக்கு 2லட்சம் HDFC வங்கியில் கடன் வாங்கி பிளாட் வாங்க கொடுத்தேன் அது என் அப்பா சொன்னதன் அடிப்படையில் கொடுத்தேன். எனது அப்பா என் அத்தையிடம் 3லட்சம் கடன் வாங்கி கொடுத்தார், என் அப்பா நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரரிடம் 2லட்சம் கடன் வாங்கி கொடுத்தார் அதை அடைக்க அத்தையிடம் மேலும 2லட்சம் கடன் வாங்கி கொடுத்தேன். பென்சன் புத்தகத்தை அடைமானம் வைத்து ரூ 60,000 கடன் வாங்கியிருந்தார் அதையும் அடைத்தேன். மொத்த எவ்வளவு கடன் இருக்கிறது என்றால் 12.5 லட்சம் கடன் அடைத்தேன். பி.சா.ஆ.4 நிக்கல்சன் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியதாக உள்ளது என்றால் ஆமாம். அப்பா எப்போது இறந்தார் என்றால் 2019 டிசம்பர். பி.சா.ஆ. 4நிக்கல்சன் கூட்டுறவு வங்கியில் அப்பா பெயரில் கடன் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் அந்த கடன் கட்டியதற்காக ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நிக்கல்சன் வங்கி கடனை நான் செலுத்தவில்லை என்றும் என் தாயார்தான் கடனை செலுத்தினார் என்றால் மறுக்கிறேன். வரவு ரசீது பி.சா.ஆ.5 இல் என் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை அந்த கடன் 2007 ஆம் ஆண்டு எனது அப்பாவே திரும்ப செலுத்தியதாக வரவு ரசீது உள்ளது. பி.வா.சா.ஆ. 6 என் அம்மாவ ழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் கொடுத்தது என்றால் ஆமாம். அந்த பதில் அறிவிப்பு எனது தாயார் அறிவிப்பு கொடுத்ததில்இருந்து 58 நாட்கள் கழித்து கொடுத்தேன் என்றால் ஆமாம் கொரானாடைம். அந்த அறிவிப்பு வழக்கு தாக்கல் செய்தபிறகு கொடுத்தேன் என்றால் ஆமாம். என் அப்பா பென்சன் புத்தகத்தை அடமானம் வைத்து கடன் வாங்கும் வாழ்க்கை வாழவில்லை என்றும், நாகரீகமான வாழ்க்கை வாழ்ந்தார் என்றால் சரியல்ல. பென்சன்

புத்தகத்தை யாரிடம் அடமானம் வைத்தார் என்று நான் சொல்லவில்லை என்றும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அத்தையிடம் கடன் வாங்கிய 5 லட்சத்தை நான் திரும்பி செலுத்தியதற்கு ஏதாவது ரசீது உள்ளதா என்றால் உறவுகாரர் என்பதால் ரசீது இல்லை. என் சகோதரிக்கு வீடு வாங்க கொடுத்த 2லட்சத்திற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை தொகையாததான் கொடுத்தேன். தொகையாக கொடுத்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் குடும்பஉறவில் இல்லை. அப்பா இறந்தவுடன் அம்மாவிடமிருந்து நான் நான்கு வளையல்களை வாங்கினேன் என்றால் மறுக்கிறேன். எனக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் 2015 அக்டோபர். நான் வாங்கிய சம்பளமே என் மனைவியுடன் குடும்பத்தை நடத்த போதுமான இல்லை என்று சொன்னால் சரியல்ல என் மனைவியும் சம்பாதித்தார். அம்மா வீட்டிற்கு தற்போது வரலாமா என்றால் வரலாம். 1944 வருடத்திய உயில்படி நிலத்தில் ஆண்வாரிசுக்கு சொந்தம் என்று சொல்லும் நான் நாணயக்கார செட்டித்தெருவில் உள்ள வீட்டின் பாகம் கொடுக்க தயாராக இருக்கிறேனா என்றால் ஏற்கனவே நிறைய செய்துவிட்டோம் அதனால் தயாராக இல்லை. அம்மாவிற்கு வைத்தியம் பார்த்தோம் என்று சொல்கிறேன் அது எவ்வளவு செலவு பார்த்தேன் என்றால் அம்மாவால் நான் வேலைக்கு போகமுடியாமல் அவருடன் இருந்தேன். வழக்குக்கு செலவு செய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் அம்மாவுடன் இருந்த இரண்டு ஆண்டுகளில் எனக்கு வேலையே போய்விட்டது. அப்பாவுடைய சொத்தை நானே வைத்து கொண்டு பாகம் கொடுக்காததால் என் தாயார் வழக்கு போட்டார் என்றால் அதை நான் மறுக்கிறேன். தாவா சொத்துக்களில் வாதி என் தாயார் 4இல் 1பங்கு கிடைக்க உரிமை உண்டு என்று சொன்னால் மறுக்கிறேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.